# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108530

1. District மாவட்டம் : திருப்பூர் | PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு | Year ஆண்டு : 2022 | FIR No. மு.த.அ. எண் : 01/2022/AC/TPR | Date நாள் : 24.01.2022

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: by the PC (Amendment) Act | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: 2018 | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் : 04.01.2022 | Date to நாள் வரை : 21.01.2022
   Time Period நேர அளவு : | Time from நேரம் முதல் : 11.00 hrs | Time to நேரம் வரை : 07.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.01.2022 | Time நேரம் : 09.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.01.2022 | Time நேரம் : 09.00 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 25 கி.மீ வடகிழக்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி O/o. உதவி மின்பொறியாளர் அலுவலகம், TANGEDCO, குன்னத்தூர் கிராமியம், திருப்பூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. கருப்புசாமி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. கருப்பண்ணன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52 years | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் பிட்டர் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம், திருப்பூர் | (g) Address : முகவரி 2/159, B பட்டையகாரர் தோட்டம் பவர்ஹவுஸ் மேடு, சீண்டக்காம்பாளையம் குன்னத்தூர், திருப்பூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. சுரேஷ், உதவி மின் பொறியாளர், TANGEDCO, குன்னத்தூர் கிராமியம், திருப்பூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விபரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. [signature] 24/01/2022

[signature] 24.01.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.01.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. [illegible]
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
ஊ.த.க. பிரிவு,
திருப்பூர்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.18(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 1/2022/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 24.01.2022-ம் தேதி காலை 09.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது K.கருப்புசாமி - வயது 52, த/பெ.கருப்பண்ணன், 2/159 B, பட்டையகாரர் தோட்டம், பவர் ஹவுஸ் மேடு, சுண்டக்காம்பாளையம், குன்னத்தூர், திருப்பூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர்:K. கருப்புசாமி - வயது 52 த/பெ.கருப்பண்ணன் 2/159, B பட்டையகாரர் தோட்டம் பவர் ஹவுஸ் மேடு, சுண்டக்காம்பாளையம் குன்னத்தூர் திருப்பூர். செல் நம்பர். 9965699318 பெறுநர்.ஆய்வாளர் அவர்கள் லஞ்ச ஒழிப்புத் துறை திருப்பூர் நான் திருப்பூர் குன்னத்தூர் சுண்டக்காம்பாளையம், பவர், ஹவுஸ் மேடு, கதவு எண் 2/159, B, பட்டையகாரர் தோட்டத்தில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பிட்டராக பணிபுரிந்து வருகிறேன். எனது பெயரிலும் எனது மனைவி சாந்தி பெயரிலும், சுண்டக்காம்பாளையம் கிராமத்தில் ரீ.ச.எண் 67/5-ல் 1.90 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. மேற்படி நிலத்திற்கு நானும் எனது மனைவியும் சுயநிதிதிட்டத்தில் 7.5 H.P விவசாய மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் இணைப்பு வாங்க முடிவு செய்து எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பெருந்துறை அலுவலகத்தில் 19.08.2011 தேதி விண்ணப்பம் செய்தோம். மேற்படி விண்ணப்பத்துடன் எங்களது நிலத்திற்கான பத்திரம், பட்டா, சிட்டா, நில வரைபடம், F.M.B, விவசாய நிலத்தில் போர்வெல் இருப்பதற்கு V.A.O சான்று, நிலஉரிமை சான்று ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அப்போது அங்கிருந்த செயற்பொறியாளர் சீனியாரிட்டி அடிப்படையில் தான் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படும் என்றும் அவ்வாறு வரும்போது அறிவிப்பு வரும் என்றும் கூறினார். இவ்வாறிருக்க திருப்பூர் மாவட்டம். குன்னத்தூர் கிராமியம், உதவி பொறியாளர் அலுவலகத்திலிருந்து உரிமைசான்று மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை கேட்டு 16.11.2021 தேதி கடிதம் வந்தது. நான் மேற்படி ஆவணங்களை VAO மற்றும்

தாலுக்கா அலுவலகத்தில் வாங்கி மேற்படி AE அலுவலகம் சென்று AE சுரேஷ் அவர்களி கொடுத்தேன். இந்நிலையில் 4.01.2022 தேதி காலை நான் வீட்டில் இருந்தபோது மேற்படி AE சுரேசும் மற்றும் குன்னத்தூர் பவர் ஹவுஸ் அலுவலகத்தில் வேலை செய்யும் போர்மேன் வெங்கடாசலம் ஆகியோரும் எனது வீட்டிற்கு வந்து என்னிடம் விவசாய பம்ப் செட்டிற்கு மின் இணைப்புக்கு விண்ணப்பம் செய்துள்ள விபரத்தை கேட்டார்கள். அதற்கு நான் விண்ணப்பம் 2011ம் வருடம் செய்துள்ளதை அவர்களிடம் கூறினேன். அதற்கு உங்களுக்கு சீனியாரிட்டி அடிப்படையில் மின்இணைப்பு வழங்க ஆணை வந்துள்ளதாக கூறி இடத்தை அளந்து பார்த்தார்கள். அதன்பின் நிலத்திற்கான வரைபடம், அடங்கல், பட்டா, ஆகியவற்றை வாங்கிக்கொண்டு அலுவலகத்தில் வந்து பார்க்குமாறும், உங்களுக்கு பெருந்துறை EE அலுவலகத்திலிருந்து தபால் வரும் என்றும், வந்தவுடன் வந்து பார்க்குமாறு சொன்னார்கள். அப்போது AE சுரேஷ் அவர்கள் என்னிடம் உங்களுக்கு சாதாரண வரிசையில் மின் இணைப்பு வழங்க பரிந்துரை செய்ய தனக்கு ரூ.50,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் எதற்கு லஞ்சம் கொடுப்பது இது சீனியாரிட்டி அடிப்படையில்தானே வருகிறது என்று சொன்னேன். அதற்கு AE யும் போர்மேனும் பார்த்து கவனியுங்க என்று சொன்னார்கள். அப்போது AE எனது செல்போன் எண்ணை வாங்கிக்கொண்டு அவரது செல்போன் எண் 9445852061 ஐ எனக்கு கொடுத்தார். அதன் பின் அவர்கள் சென்று விட்டார்கள். எனக்கு பெருந்துறை EEஅலுவலகத்திலிருந்து கடிதம் 6.01.2022 தேதி வந்தது. அதே 6.01.2022 தேதி மதியம் மேற்படி AE சுரேஷ் அவர்கள் எனது வீட்டிற்கு வந்து எனது அம்மாவிடம் என்னை கேட்டுள்ளார். எனது அம்மா வேலைக்கு சென்றுள்ளதாக சொன்னபோது, நாளை காலை என்னை வீட்டில் இருக்குமாறு சொல்லிவிட்டு சென்றுள்ளார். 7.01.2022 தேதி காலை 11 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது மேற்படி AE யும், போர்மேனும் வந்தார்கள். அப்போது AE என்னிடம் தபால் வந்ததா என்று கேட்டார். நான் நேற்று 05.01.2022 ம் தேதியிட்ட தபால் வந்தது என்று சொன்னேன். அப்போது அவர் என்னிடம் அதன் காப்பியை வாங்கி விட்டு நான் கேட்ட பணம் ரெடி பண்ணி விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் இல்லை என்று சொன்னேன். அப்போது பணத்தை கொடுக்குமாறும் அப்போதுதான் தான் பரிந்துரை செய்யமுடியும் என்று AE சொன்னார். அப்போது அவர் EE அலுவலகத்திலிருந்து இன்னொரு தபால் வரும் வந்தவுடன் வந்து

பார்க்க சொன்னார். எனக்கு 8.01.2022 தேதி காலை EE அலுவலகத்திலிருந்து 7.01.2022 தேதியிட்ட கடிதம் வந்தது. நான் அன்றே VAO மற்றும் தாலுகா அலுவலகம் சென்று நில உரிமை சான்று, F.M.B, பட்டா, அடங்கல், வரைபடம் வாங்கிவிட்டு அதையும் 7.01.2022 தேதியிட்ட செயற்பொறியாளர் பெருந்துறை அலுவலகத்திலிருந்து ரீ.சர்வே எண் 67/5 C1 என மாற்றம் செய்யப்பட்ட கடிதத்தையும் AE அலுவலகம் சென்று AE அவர்களை பார்த்து கொடுத்தேன். அப்போது அவர் சீக்கிரமாக பணத்தை ரெடி பண்ணிவிட்டு வாங்க என்று சொன்னார். 13.01.2022 தேதி மதியம் AE அவர்கள் எனக்கு இரண்டு தடவை செல்போனில் தொடர்பு கொண்டார். நான் போனை எடுக்கவில்லை. அதன் பின்னர் நான் AE அவர்களை சுமார் 2.30 மணிக்கு செல்போனில் தொடர்பு கொண்டபோது அவர் பணத்தை ரெடி பண்ணீட்டீங்களா என்று கேட்டார். அதற்கு நான் இல்லை என்றும் கஷ்டமாக இருக்கிறது என்றும் சொன்னேன். அதற்கு அவர் தற்போது 15000 கொடுங்கள் Estimate தயார் செய்யும் போது மீதி பணத்தை கொடுங்கள். மேற்படி 15,000த்தை பொங்கலுக்கு பின்னர் கொண்டு வந்து கொடுக்குமாறும் சொன்னார். நான் சரி என்று சொன்னேன். 19.01.2022 தேதி மாலை சுமார் 4.30 மணிக்கு எனது செல்போனுக்கு வெங்கடாசலம் அவரது செல்போன் 9790665694 லிருந்து தொடர்பு கொண்டார். நான் போனை எடுக்கவில்லை. இதனால் 20.01.2022 தேதி மதியம் 2.30 மணிக்கு எனது வீட்டிற்கு வந்து எனது அம்மாவிடம் என்னைப்பற்றி கேட்டுள்ளார். 20.01.2022 தேதி AE அவர்கள் சுமார் 3.30 மணியளவில் எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு பணத்தை ரெடி பண்ணிவிட்டீர்களா அப்போது தான் சீக்கிரமாக Process பண்ணமுடியும் என்று சொன்னார். நான் அவரிடம் பணம் ரெடி பண்ண முடியவில்லை என்று சொன்னேன். மீண்டும் 21.01.2022 தேதி காலை 07.30 மணிக்கு எனது செல்போனுக்கு AE போன் செய்து பணத்தை கேட்டார். நான் அவரிடம் Condolenceக்காக வெளியே சென்றுவிட்டதாக சொன்னேன். அப்போது அவர் பணத்தை ரெடி பண்ணிவிட்டு என்னை கூப்பிடுமாறு சொன்னார். எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் 7.5 HP விவசாய மோட்டார் பம்ப் செட்டிற்கு சாதாரண வரிசையில் மின் இணைப்பு வழங்க பரிந்துரை செய்ய குன்னத்தூர் கிராமியம் AE சுரேஷ் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.15,000/- கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Sd/- xxxx K.Karuppusamy 24/01/2022 Sir, Received the complaint on 24.01.2022 at 09.00 hrs and conducted enquiry between 09.00 hrs to 09.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.01/2022/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 at 09.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 24.01.2022 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of Tr.K.Karuppusamy(52), S/o.Karuppanan, 2/159,B, Pattayakararthottam, Power Housemedu, Sundakkampalayam, Kunnathur, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha), 24.01.2022
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.